# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil
₹ 10/-

India's National Spiritual Newspaper

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE
REACHING NATIONS

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXIX | APRIL 2024 | No. 04


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 34:1-10

1. கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.
2. கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மை பாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக் கேட்டு மகிழுவார்கள்.
3. என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.
4. நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார்.
5. அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை.
6. இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.
7. கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.
8. கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
9. கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை.
10. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.

# உங்களை விடுவிக்க ஓர் இரட்சகர் இருக்கிறார்! பயப்படாதேயுங்கள்!!

சகோதரி ஜெஸி வீனா சாம்



இன்றைய காலங்களில் இரட்சகராய் இருந்து வழிநடத்திவரும் நம்முடைய தேவன் வேதாகமத்தில்கூட, தம்முடைய அநேக மக்களின் கூக்குரலைக் கேட்டு, விண்ணப்பங்களுக்கு செவிசாய்த்து, அவர்களை ஆபத்துகளில் இருந்து மீட்டு, அவர்களுக்கு இரட்சிப்பு அருளி இருக்கிறார். அவர்களில் ஒரு சிலரை தேவன் எவ்விதமாக, யாரைக் கொண்டு எப்படி இரட்சித்தார் என்று பார்க்கலாம்.

## 1. மோசே!

முதலாவது மோசே எப்படி இஸ்ரவேல் மக்களை எங்கிருந்து, எப்படி காப்பாற்றி இரட்சித்தார் என்று பார்ப்போம். யாத்திராகமம் 2ம் அதிகாரத்தில். அவருடைய வாழ்க்கையின் ஆரம்பத்தினைப் பார்க்கலாம். எகிப்து நாட்டிற்கு யோசேப்பினால் சுதந்திரமாக வாழச்சென்ற இஸ்ரவேல் மக்கள், பின்பு அதே நாட்டில் அடிமைகளாகி 400 வருடங்கள் மிகவும் வேதனைப்பட்டு, கடுமையாக நடத்தப்பட்டு, துன்பப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து தேவனை நோக்கிக் கூக்குரலிட்டார்கள்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து


தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





**"கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக் கொள்ளாதபடி காப்பார்" - நீதிமொழிகள் 3:26**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!

நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் மகிமையுள்ள நாமத்தில் உங்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்.

நமது பல்வகை ஊழியங்களைக் குறித்த பின்னூட்டத்தை (Feedback) நாங்கள் பெற்று வருவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். 16 மொழிகளில் மாதந்தோறும் வெளிவரும் நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள், நான்கு மொழிகளில் செய்திகளை வெளிவரும் **அழைப்பின் எதிரொலி யூடியூப் சானல்,** 'BIBLECOR' என்ற அடிப்படை **வேதாகமக் கல்வி** (3 மொழிகள்), 2 மொழிகளில் நடத்தப்படும் **இறையியல் தபால்வழிக் கல்வி** (Theological Correspondence Course), 3 வெவ்வேறு இடங்களில் நடைபெறும் நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்,** நமது கிராம ஆங்கில வழி உயர்நிலைப் பள்ளியான **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி,** நமது தலைமை சபை, கிளை சபைகள், அச்சகம் ஆகியவற்றைக் குறித்த நல்ல செய்திகளை நாங்கள் மக்களிடமிருந்து பெற்று வருகிறோம். உலகத்திற்கு சுவிசேஷத்தைப் பரப்புவதில் நாங்கள் சுறுசுறுப்பாய்க் காணப்படுகிறோம். நீங்கள் இந்த ஊழியங்களைத் தாங்குவதற்காகவும், உங்கள் அன்புக்காகவும் நன்றி கூறி, மேலும் உங்கள் கடிதங்களையும், கருத்துக்களையும் எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.




**செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி ஆண்டு விழா**

நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில்** ஆண்டு விழா, மார்ச் 2, 2024 அன்று சிறப்பாக நடைபெற்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்று மாணவர்கள் தங்கள் திறமைகளை அருமையாக வெளிப்படுத்தினர். மாணவர்களின் பெற்றோர், குழந்தைகள், சுற்றுப்புறத்தில் வசிக்கும் நண்பர்கள் போன்ற பலர் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அது ஒரு ஆவிக்குரிய கன்வென்ஷன் கூட்டம் மற்றும் சுகமளிக்கும் விடுதலைக் கூட்டம் போலக் காணப்பட்டது. எங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் தொடர் ஜெபங்களுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம்.

மார்ச் 3, 2024 அன்று, சிறுவர்கள் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்புக் கூட்டத்தையும், **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** வளாகத்தில் நடத்தினோம். சுமார் 100 நபர்கள் அதில் கலந்து கொண்டார்கள். அதில் ஆவிக்குரிய சிறப்புப் பாடல்கள், சாட்சிகள், செய்திகள் என்று பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.



**சிறுவர்கள் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்புக் கூட்டம்**

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**HON. MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Sis. L. Mariya Anjalin, M.A., M.Sc., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call



தேர்வுக்கான ஜெபத்தில் பிள்ளைகள்

ஒவ்வொரு ஞாயிறும் ஆராதனை முடிந்த பின்பு இளம் ஆண்களையும், பெண்களையும் சந்தித்து வாலிபர் கூட்டம் நடத்துகிறோம். இந்த பிள்ளைகள் கர்த்தருக்கேற்ற வழியிலே வளர்க்கப்படுகிறார்கள். நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கும்,** ஹிந்தி, தமிழ் ஆகிய மொழி களில் நடத்தப்படும் **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்கும்,** மேலும் சில மாணவர்கள், நல்ல ஆசிரியர்கள் மற்றும் தலைவர்கள் தேவைப்படுகிறார்கள். அது மட்டுமல்லாமல் 16 மொழிகளில் வெளியிடப்படும் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு புதிய வாசகர்களும் தேவைப்படுகிறார்கள். உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரின் விலாசங்களை எங்களுக்கு அனுப்பினால் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை இலவசமாக அவர்களுக்கு அனுப்பு வோம். குறிப்பாக உருது மொழி வாசகர்கள் தேவைப்படு கிறார்கள். இவ்வாறாக நீங்கள் செய்யும் சிறிய அல்லது பெரிய உதவிகள் வரவேற்கப்படுகின்றன. தேவன் அதற்கான பிரதிபலனை உங்களுக்கு அருள்வாராக!

உலகெங்குமுள்ள அனைத்து நாடுகளின் சமாதானத்திற்காகவும், செழிப்பிற்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். விசேஷமாக, இந்தியாவின் ஆவிக்குரிய நலனுக்காக நாங்கள் ஜெபித்து வருகிறோம். உங்கள் மேலும், உங்கள் குடும்பங்கள் மேலும், உங்கள் தேசத்தின் மேலும் தேவ ஆசீர்வாதம் பொழியப்பட வேண்டும் என்று தேவனிடத்தில் வேண்டிக் கொள்கிறோம்.

ஒவ்வொரு மாதமும் நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** தலைவர் மற்றும் முதல்வர் ஆகியோர் தலைமையில், கல்லூரி ஆசிரியர்கள்



நமது நெகேமியா வேதாகமக் கல்லூரியின் செயற்குழுக் கூட்டம்

மற்றும் பணியாளர்கள் கூடி நிகழ்வுகளைக் குறித்து கலந்து ஆலோசித்து வருகிறார்கள்.

எங்கள் ஆவிக்குரிய போராட்டத்தில் முன்னேறிச் செல்ல உங்கள் மின்னஞ்சல்கள், கடிதங்கள், தொலைபேசி அழைப்புகள் போன்றவைகள் எங்களுக்கு பெலனளிப்பதால், அவைகளை எதிர்பார்க்கிறோம். எங்கள் அலுவலக ஊழியர்கள், சபை அங்கத்தினர்கள், பத்திரிகை துணை ஆசிரியர்கள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள், ஞாயிறு பள்ளியில் பயிலும் மாணவர்கள், கிராம உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், வேதாகமக் கல்லூரி மாணவர்கள், அச்சகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் எங்கள் குடும்பத்தினர் ஆகியோருக்கு உங்கள் விசேஷ ஜெபம் தேவைப்படுகிறது. **அநேக பணியாளர்கள் நல்ல ஆரோக்கியமில்லாமல் இருக்கிறார்கள்.** . அவர்களையும் உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,**

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

(+91) 98410 71858 / 98412 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

## நமது அழைப்பின் எதிரொலி பத்திரிகையின் வாசகர்களின் கவனத்திற்கு!

*நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில்* **Echo of His Call YouTube** *சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட* (Personal) *இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

இதனை தேவன் ஏற்கனவே ஆபிரகாமிடத்தில் இஸ்ரவேல் மக்களின் 400 வருடம் அடிமைத்தனத்தைப் பற்றி, ஆதியாகமம் 15:13–ல் **அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: "உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்."** என்றும் ஆதியாகமம் 15:16–ல் **நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்திற்குத் திரும்ப வருவார்கள் ...** என்றும் வாக்குப் பண்ணியிருந்தார்.

எனவேதான் இஸ்ரவேல் மக்கள் வேதனையைப் பொறுக்க முடியாமல் நாங்கள் 4 தலைமுறையாக இப்படி நெருக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறோமே; தேவனே! எங்கள் மேல் இரக்கம் கொண்டு, இந்த கொடுமையான பார்வோனின் கையிலிருந்து எங்களை இரட்சியும். நாங்கள் எப்போது எங்கள் மூதாதையருக்கு, நீர் ஆணையிட்டுக் கொடுத்த பாலும் தேனும் ஓடும் கானானுக்கு சென்று, அங்கு நாங்கள் விடுதலையோடு எங்கள் தேவனை ஆராதித்து பலி செலுத்தி கொண்டாடுவோம்?" என கூக்குரலிட்டு அங்கலாய்த்தார்கள்.

தேவன், அவர்களின் கூக்குரலைக் கேட்டார். தேவன், தம்முடைய ஜனத்தை சோதிப்பார். ஆனால், திராணிக்கு மேலாக சோதிக்க மாட்டார். அவர்கள் வழிமாறி தன்னை மறந்து ஜீவித்தாலும், அவர்கள் தாங்கள் சென்ற பாதை தவறு என்று உணர்ந்து, பாவ வழியைவிட்டு விலகி, 'தேவனே மன்னியும். எங்கள் மேல் இரக்கமாகி எங்களை இதிலிருந்து இரட்சியும்' என கதறும்போது, அவருடைய அன்பான உள்ளம் அவர்களின் கூக்குரலுக்கு இசைந்தது.

இவ்வளவு பெரிய ஜனக்கூட்டத்தை பராக்கிரமசாலியான பார்வோனின் கையிலிருந்து, 'யாரைக் கொண்டு எப்படி

## ஜெபியுங்கள்!

*2024 ஏப்ரல், மே மாதங்களில் நம் ஊழியர்களின் சார்பில் சிறு பிள்ளைகளுக்கான வேனிற்கால விடுமுறைப் பள்ளிகள் இந்தியா முழுவதிலும் நடைபெறும். உங்கள் ஜெபம் தேவை.*

*– ஆசிரியர்*

விடுவிக்க வேண்டும்?' என்பதை திட்டம் பண்ணியிருந்தார் தேவன்! அவர் ஒவ்வொருவரையும் ஒரு நோக்கத்துடன்தான் உண்டாக்கி இந்த உலகத்திற்கு அனுப்புகிறார். அப்படித்தான் மோசேயை, அடிமைகளாக இருக்கும் மக்களை, பார்வோனிடம் இருந்து மீட்கும் இரட்சகராக முன்குறித்து இருந்தார். எனவேதான் மோசேயை ஒரு இரட்சகராக தேவன் தாயின் கருவில் கண்டார். (**என் கருவை உம்முடைய கண்கள் கண்டது** ... சங்கீதம் 139:16,) எகிப்தில் 2 வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளையும் கொன்று குவித்த நேரத்தில் குழந்தையாகிய மோசே கொல்லப் படாமல், காத்தார். குழந்தையின் தாய் 3 மாதம் அளவில் மறைத்து ஒளித்து வைத்து, அதற்கு மேலும் மறைக்க இயலாத நிலையில் குழந்தையை முதலைகள் நிறைந்த நைல் நதியில் ஒரு நாணற்பெட்டியில் வைத்து விட்டு விட்டாள்.

இஸ்ரவேல் மக்களை அழிக்க, 2 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை கொன்று குவிக்க சொன்ன பார்வோனின் அரண் மனையிலேயே, மோசே ஓர்அரசகுமாரனாக வளர்ந்தார். இது எவ்வளவு பெரிய அதிசயம்! பின் அவர் 'தான் ஒரு எபிரேயன்' என்ற உள் உணர்வினால் எகிப்தியனைக் கொன்று, கொலைகாரனாக வனாந்திரத்திற்கு ஓடிப்போய், அங்கு 40 வருடங்கள் ஆடுகளை மேய்த்துக் கொண்டு சுற்றித் திரிந்த போது மோசேயை அழைத்து, அவரோடு பேச தேவன் அவருக்கு ஒரு காட்சியை காட்டி தன்னிடம் இழுக்கிறார்.

அதாவது, ஒரு பற்றி எரிகிற முட்செடி, ஆனால் அதின் இலைகளும், செடிகளும் கருகாமல் இருந்தது. இந்த ஆச்சரியத்தைக் கண்ட மோசே, "இது எப்படி ஆகும்? செடிகள் கருகாமல், சின்ன இலைகளும் கருகாமல் இருப்பது என்ன?" எனக்கூறிக் கொண்டே அதன் கிட்டப் போய் பார்க்கச் சென்றபோது, "மோசே, மோசே" என்று அழைத்து, "இஸ்ரவேல் மக்களின் கூக்குரல் எனக்கு கேட்டது. நீ எகிப்தில் பார்வோனிடம் சென்று அடிமைப்பட்டு இருக்கும் இஸ்ரவேல் மக்களை மீட்க பார்வோனிடம் பேசி, அவர்களை விடுவித்து, நான் ஆபிரகாம், ஈசாக்குக்கு ஆணையிட்டு கொடுத்த கானான் தேசத்திற்கு அவர்களை அழைத்துக் கொண்டு போகும் பணியை உன்னிடம் கொடுக்கிறேன்." என்றார்.

உடனே மோசே அதற்கு சம்மதிக்காமல் தேவனை பல கேள்விகள் கேட்கிறார். 'நான் போய் உம்மைப் பற்றிச் சொன்னால் என்னை நம்ப மாட்டார்கள். உம்முடைய பேரைக் கேட்பார்கள். நான் திக்குவாயும் மந்த நாக்கும் உள்ளவன்' என பல சாக்குப் போக்கு கூறி மறுக்கிறார். அதற்கு தேவன், "நீ பார்வோனிடம் போ, நான் உன்னுடனே இருக்கிறேன். ஆரோனையும் துணைக்கு அழைத்துக் கொண்டு போய் பேசு" என்று கர்த்தர் கூறுகிறார். "என்றார்.

நாமும்கூட சில சமயங்களில் தேவன் ஒரு காரியத்தை இப்படிச் செய் – இதைச் செய்யாதே என்று கூறும்போது நம்முடைய சுயமானது, பல சாக்கு போக்குகளைக் கூறி நம்மை நியாயப்படுத்திக் கொள்ள முனைகிறது.

ஆனால் மோசே முதலில் மறுத்தாலும் பின் தேவனுக்குக் கீழ்படிகிறார். அதனால்தான் **ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார்** என யாத்திராகமம் 33:11–ல் பார்க்கிறோம்.

தேவன் இஸ்ரவேல் மக்களை விடுவிக்கும்படியாக மோசேயை தெரிந்து கொண்டு, எகிப்தில் பல அற்புதங்களையும், அதிசயங்களையும் நடத்தி, இஸ்ரவேல் மக்களை பார்வோனின் கோட்டையில் இருந்து விடுவித்துக் கொண்டு வருகிறார்.

இதனை யாத்திராகமம் 1ஆம் அதிகாரம் முதல் 14ஆம் அதிகாரம் வரையில் காண்கிறோம். 430 வருடம், 4 தலைமுறையாக அடிமைகளாய் இருந்த இஸ்ரவேல் மக்களை அனுப்பிய பார்வோன், மறுபடியும் அவர்களை பின் தொடர்ந்துவர தேவன் அனுப்புகிறார்.

இஸ்ரவேல் மக்கள் செங்கடலை அடைகிறார்கள். அப்போது அவர்கள் முன்னே செங்கடலும், பின்னேயோ பார்வோனின் சேனையும், வலது புறமும், இடது புறமும் மலைகளால் சூழப்பட்டு இருந்தன. இதனைக் கண்ட இஸ்ரவேல் மக்கள் கூக்குரலிட்டு, திகைத்து நின்றனர்.

இந்த நிலையில் மோசே தேவனை நோக்கிப் பார்த்தபோது, தேவன் செங்கடலை பிளந்து விடு என்றார். மோசே தன் கோலை நீட்டினார். கடல்நீர் இரண்டாகப் பிளந்து மதிலாக நின்றது. வழி உண்டானது. இஸ்ரவேல் மக்கள் தரையில் நடப்பதுபோல் கடந்து சென்றனர்.

பின் தொடர்ந்து வந்த பார்வோன் சேனை கடலில் மூழ்கி மாண்டது. இதனிமித்தம் தேவன் தாம் எவ்வளவு பெரிய பராக்கிரமசாலி என்றும், மகிமையுள்ளவர் என்றும் அறியச் செய்தார்.

இப்படியாக ஜனங்களை மீட்டுக் கொண்டு வர மோசேயை தேவன் ஒரு இரட்சகராக பயன்படுத்தினார். செங்கடலைப் பிளந்து, வழியுண்டாக்கி, மீட்டுக் கொண்டு வர, மோசேயை தேவன் ஒரு **இரட்சகராக** பயன்படுத்தினார்.

## 2. ஒத்னியேல்!

அடுத்து, நம்மைப் போலவே இஸ்ரவேல் மக்களும் எவ்வளவு அற்புதங்களைக் கண்டாலும் திரும்ப, திரும்ப பாவக்குழிகளில் விழுந்து விடுகின்றனர். நியாயாதிபதிகள் புத்தகத்தில் 3ஆம் அதிகாரத்தில் 7ஆம் வசனம் முதல் 11ஆம் வசனம் வரை பார்க்கும்போது, இப்படியான இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தில் தேவனை மறந்து, கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் ஆகிய இவைகளின் நடுவே குடியிருந்து, அவர்களுடன் சேர்ந்தும், பெண் கொடுத்து பெண் வாங்கியும், அவர்களுடைய

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி – முழுநேரம் – இந்தி
சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்
(திங்கள், செவ்வாய், வியாழன்)

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Ministry
Diploma in Theology

கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2024 ஏப்ரல் 19 முதல் மே 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்திலுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஏப்ரல் 19 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** 10–ம் வகுப்பு மாணவர்களை நன்றாக தேர்வு எழுத வைத்த கிருபைக்காக...

ஏப்ரல் 20 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழிக் கல்விமுறைகளைக்** கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஏப்ரல் 21 ⇨ நமது ஊழியர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் பாதுகாத்து வரும் கிருபைக்காக ...

ஏப்ரல் 22 ⇨ நமது ஜெபப் பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஏப்ரல் 23 ⇨ மார்ச் 2, 2024 அன்று, நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** ஆண்டுவிழா சிறப்புற நடைபெற வைத்த கிருபைக்காக...

ஏப்ரல் 24 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில்** மார்ச் 3, 2024 அன்று நடந்த, தேர்விற்கான ஜெபக் கூடுகை மற்றும் வாலிபர்களுக்கான சிறப்புக் கூட்டத்தை ஆசீர்வதித்த கிருபைக்காக ...

ஏப்ரல் 25 ⇨ இளம்பிராயத்தினரை உற்சாகத்தினால் நிரப்பி அனைத்து சபை நடவடிக்கைகளிலும் பங்கேற்க செய்த கிருபைக்காக ...

ஏப்ரல் 26 ⇨ **அழைப்பின் எதிரொலி** யூடியூப் சேனல் மூலமாக, சந்திக்கப்படாத பன்மொழி மக்களை சந்திக்க வைத்த கிருபைக்காக ...

ஏப்ரல் 27 ⇨ நமது சபை ஊழியங்கள், சிறுவர் ஊழியங்கள், வாலிபர் ஊழியங்கள், மருத்துவமனை ஊழியங்கள் போன்ற அனைத்து ஊழியங்களையும் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஏப்ரல் 28 ⇨ ATA அங்கீகாரத்திற்கான மதிப்பீட்டுக் குழு (VET – Visiting Evaluation Team) வருகை தேவ ஆசீர்வாதத்தால் நிரப்பப்பட்டிருந்த கிருபைக்காக...

ஏப்ரல் 29 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் பாதுகாப்பு அளித்து வருகிற கிருபைக்காக...

ஏப்ரல் 30 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக...

மே 01 ⇨ 2023–2024ம் நிதியாண்டில் கர்த்தர் செய்த நன்மைகளுக்காக...

மே 02 ⇨ நமது இணை ஆசிரியர்கள், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

மே 03 ⇨ களப் பணியாளர்களின் மகத்தான அர்ப்பணிப்புக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

மே 04 ⇨ உலகில் நிலவும் மோசமான பருவகால மாறுதலில் இருந்து தேவ பாதுகாப்பு கிடைத்திட வேண்டி...

மே 05 ⇨ இவ்வுலகில் தியாக மனப்பான்மையுடன் குழந்தைகளை வளர்க்கும் அனைத்து அன்னையர்களின் நலனை வேண்டி...

மே 06 ⇨ இஸ்ரேல், பாலஸ்தீனம், ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளில் சமாதானம் பரவ ...

மே 07 ⇨ நமது தலைமைப் போதகரின் சுயசரிதை எழுதும் பணி வெற்றிகரமாக நிறைவடைந்திட...

மே 08 ⇨ இந்த புதிய நிதியாண்டில் (2024–25) தேவனுடைய வழிகாட்டுதல் கிடைத்திட வேண்டி...

மே 09 ⇨ போதகர் ஜானி அவர்களின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு தேவ ஆறுதல் கிடைத்திட வேண்டி...

மே 10 ⇨ நமது சுவிசேஷ அச்சகப் பணிகள் தங்குதடையின்றி நடப்பதற்காக...

மே 11 ⇨ நமது வேதாகமக் கல்லூரிகள் ATA அங்கீகாரத்திற்கான செயல்பாடுகளில் ஆண்டவரின் கிருபை இருக்க வேண்டி...

மே 12 ⇨ நமது பணியாளர்கள் ஒருமித்த மனதுடனும், ஒற்றுமையுடனும் செயல்பட வேண்டி...

மே 13 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரியின்** ஜூன் 1, 2024 அன்று நடைபெற உள்ள பட்டமளிப்பு விழாவில் கர்த்தரின் கரம் இருக்க வேண்டி...

மே 14 ⇨ 2024–25ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்கள் கிடைக்க...

மே 15 ⇨ 2024–25ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...

மே 16 ⇨ உலகில் வியாதியின் பிடியில் அகப்பட்டு மருத்துவமனைகளில் நீண்ட நாட்களாக வாடிக் கொண்டிருக்கும் நோயாளிகளுக்காக...

மே 17 ⇨ இந்தியாவில் நடைபெற உள்ள தேர்தலில் கர்த்தருக்கு சித்தமான தேவபயமுள்ள தலைவர், பிரதமராக வரவேண்டி...

மே 18 ⇨ ஊழியங்கள் மற்றும் மிஷனரிகளுக்கு எதிரான வன்முறைகள் தடுக்கப்படவேண்டி...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

தேவர்களை சேவித்து, பாகாலுக்கு தோப்பு விக்கிரகங்களை உண்டாக்கி, தேவனின் பார்வைக்கு பொல்லாங்கானதை மறுபடியும் செய்தனர்.

இதனால் கர்த்தர் இஸ்ரவேல் மக்கள்மேல் கோபம் கொண்டு அதற்குத் தண்டனையாக அவர்களை மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான் ரிஷதாயீமின் கையில் விற்றுப் போட்டார். அவர்கள் இந்த அரசனின்கீழ், எட்டு வருடங்கள் அடிமைகளாக மிகவும் கஷ்டத்தோடும், துன்பத்தோடும் வாழ்ந்து அவனை சேவித்து வந்தனர்.

தவறு செய்த அவர்களை அப்படியே விட்டு விடவில்லை. ஏசாயா 54:7 –ல் **இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக் கொள்வேன்** என்ற வாக்கின்படி இஸ்ரவேல் புத்திரர், கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி, 'தேவனே எங்களை விடுவியும்' என்று கூக்குரலிட்டு கூப்பிட்டபோது, ... **கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கும்படியாக, காலேபின் தம்பியான கேனாசுடைய குமாரனாகிய ஒத்னியேலை இரட்சகராக எழும்பப் பண்ணினார். அவன்மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால், அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, யுத்தம் பண்ணப் புறப்பட்டான். கர்த்தர், மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை அவன் கையில் ஒப்புக் கொடுத்தார். ஆகையால் அவன் கை கூசான்ரிஷதாயீமின் மேல் பலங்கொண்டது;** (நியாயாதிபதிகள் 3:9–10). வெற்றியும் கண்டான். தேசம் 40 வருடங்கள் அமைதியாக இருந்தது. இவ்விதமாக இந்த காலகட்டத்தில் ஒத்னியேலை, தேவன் அத்தேசத்து மக்களுக்கு **இரட்சகராக** எழுப்பினார்.

## 3. கிதியோன்!

அடுத்து நாம் பார்க்க இருப்பது கிதியோன்.

**பின்னும் இஸ்ரவேல் புத்திரர் முன்போலவே கர்த்தரின் பார்வைக்கு மிகவும் பொல்லாப்பானதை செய்தார்கள். எனவே கர்த்தர் அவர்களை ஏழு வருடங்கள் மீதியானியரின் கையில் ஒப்புக் கொடுத்தார்** (நியாயாதிபதிகள் 6:1).

**மீதியானியரின் கை இஸ்ரவேலின் மேல் பலத்ததால் மக்கள் மிகவும் நெருக்கப் பட்டார்கள். அவர்கள் தங்கள் நிலங்களில் விதைத்து, அதில் நீர்பாய்ச்சி அறுவடைக்கு நிற்கும் சமயத்தில் மீதியானியரும், அமலேக்கியரும், கிழக்கத்திப் புத்திரரும், இவர்களுக்கு எதிராக விளைநிலங்களை கெடுத்து, இவர்கள் தானியங்களையும், ஆடு மாடுகள் அனைத்தையும் கொண்டு சென்றார்கள். அவர்கள் வெட்டுக்கிளி கூட்டத்தார் போல வந்து இவர்களை அழித்து விட்டு போவார்கள். இதற்காகவே இஸ்ரவேல் மக்கள் மலைகளிலும், மலைகளிலுள்ள குகைகளையும், கெபிகளையும் அடைக்கல மாக்கி கொண்டனர்.** இதனை நியாயாதிபதிகள் 6:2,4,5ல் பார்க்கலாம். இப்படி மீதியானியர் கையில் அகப்பட்டு, நெருக்கப்பட்டபோது, **அவர்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.** (நியாயாதிபதிகள் 6:6).

அப்பொழுது தேவன், ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார். அவர் வந்து, இஸ்ரவேல் மக்களை நோக்கி **கர்த்தர் உரைக்கிறதாவது, "உங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கூட்டிவரும் வழியில், உங்களை எதிர்த்த யாவரின் கையிலிருந்தும் இரட்சித்து, அவர்களை உங்களுக்கு முன்பாக துரத்திவிட்டு, அவர்களின் தேசத்தை உங்களுக்கு கொடுத்து, 'நீங்கள் குடியிருக்கும் தேசத்தில், எமோரியரின் தேவர்களுக்குப் பயப்படாதீர்கள்' என்று எச்சரித்தும் கேளாமல் போனீர்கள்" என்றார்.** (நியாயாதிபதிகள் 6:10)

தேவன், தம் மக்கள் தம்மைவிட்டு விலகிச் சென்றாலும், அவர்கள் கூக்குரலிட்டு கூப்பிடும்போது, அதனைக் கேட்டு, அவர்கள் சத்தத்திற்கு செவி சாய்த்து, அவர்களை விடுவிக்க, தாம் தெரிந்து கொண்ட ஒருவரை அனுப்பி, அவர்களைத் தப்புவித்து அவர்களை இரட்சிக்கிறார்.

நாமும் கூட பல வேளைகளில், அவர் சத்தத்திற்கு செவிகொடாமல் போகிறோம். துன்பத்தில் அகப்பட்டு தவிக்கும்போது இஸ்ரவேல் மக்களைப் போல், தேவனை நோக்கி அபயமிடுகிறோம். அவர் மனமிறங்கி நம்மை தப்புவிக்கிறவராய் இருக்கிறார்.

இப்படியாக, இஸ்ரவேல் மக்களை மீதியானியர் கையில் இருந்து தப்புவிக்க, ஒரு ஒரு தூதனை அனுப்புகிறார்.

அத்தூதர், அபியேஸ்ரிபனான யோவாசின் ஊரில் ஒப்ராவில் வந்து ஒரு கர்வாலி மரத்தின் கீழ் உட்காருகிறார். அப்பொழுது அவரின் மகனான கிதியோன், கோதுமையை மீதியானியரின் கைக்கு தப்புவிக்க, ஆலைக்கு அருகில் அதனை போரடித்து கொண்டு இருந்தார். அப்பொழுது கர்த்தருடைய தூதரானவர் அவருக்கு எதிரே வந்து, "பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடேகூட இருக்கிறார்" என்றார். அப்பொழுது கிதியோன், "ஆ! தேவன் எங்களோடே இருந்தால், நாங்கள் ஏன் மீதியானியரின் கைகளில் சிக்கித் தவிக்க வேண்டும்? எங்கள் முற்பிதாக்களுக்குரிய எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அழைத்துவந்த விதங்களை சொன்ன அற்புதங்களெல்லாம் எங்கே?, அவர் எங்களை கைவிட்டு விட்டாரே" என்றான். **அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: "உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ: நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்: உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா" என்றார்.** நியாயாதிபதிகள் 6:14.

உடனே, இவரும் மோசேயை போலவே, "ஆ, ஆண்டவனே! நான் எதினால் இஸ்ரவேலை இரட்சிப்பேன், நான் மனாசேயின் குடும்பத்தில் மிகவும் எளிய குடும்பம்; நானும் எல்லாரிலும் சிறியவன், எப்படி முடியும்?" என்று முதலில் மறுக்கிறார்.

அதற்கு கர்த்தர், ஒரே மனுஷனை முறியடிப்பதுபோல் நீ மீதியானியரை முறியடிப்பாய் என்று கூறுகிறார். அப்படியும் இவர் நம்பாமல், 'என்னோடே பேசுகிறது தேவரீர்தானோ?' என்று கேட்டு, தனக்கு அடையாளத்தைக் காட்டச் சொல்லி கேட்கிறார். இப்படியாக பல அடையாளங்களைக் கண்டு, பின்பு கிதியோனும், அவரோடே இருந்த ஜனங்களும் புறப்பட்டுப் போனார்கள்.

# நெகேமியா வேதாகமக் கல்லூரி

## 2023-2024-க்கான பட்டமளிப்பு விழா

**இடம் : BKN ஹால், வேப்பேரி, சென்னை - 07.**

**நாள் : ஜூன் 1, 2024 சனிக்கிழமை**

**நேரம் : மாலை 5.00 மணி**




**சுமார் 50 மாணவர்கள் தங்கள் கல்வியை முடித்து, ஊழியக்களங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.**

**2024–2025 ஆண்டுக்கான தமிழ் (மாலை நேரம்) மற்றும் இந்தி (முழு நேரம்) மாணவர்கள் 75 பேர் தேவை. தயவுசெய்து ஜெபியுங்கள். அடுத்தக்கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.**

**– ஆசிரியர்**

அப்பொழுது கர்த்தர், “அநேக பேர்களோடு போய், அவர்களை நீ வென்றால், அது இந்த அநேக மக்களால் வந்த வெற்றி ஆகும் என்று கூறுவார்கள். எனவே, இவர்களில் பயமும், திகிலும் உள்ளவர்கள் எவர்களோ அவர்களைத் திரும்பப் போக சொல்லு” என்றார். **அப்படியே கிதியோனும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, இன்னும் பல யுக்திகளை செய்து தன்னுடன் 300 பேரை மட்டும் வைத்துக் கொண்டு** (நியாயாதிபதிகள் 7:8) மற்ற அனைவரையும் போகச் சொல்லி விட்டார்.

மீதியானின் சேனை, அவருக்குத் தாழ்வான பள்ளத்தாக்கில் இருந்தது. அன்று ராத்திரி கர்த்தர் கிதியோனை நோக்கி அந்த சேனையை உன் கையில் ஒப்புக் கொடுத்தேன் – நீ பயப்படாதே,

அப்படி **நீ பயப்பட்டாயானால், நீயும் உன்னுடன் இருக்கும் உன் வேலைக்காரனாகிய பூராவும் சேர்ந்து சென்று, முன்னணியில் இருக்கும் மீதியானவர்களின் வீரர்கள் அருகில் சென்று அவர்கள் என்ன பேசுகிறார்கள்? என்று கேள் என்றார்.** (நியாயாதிபதிகள் 7:10–11)

ஏனென்றால் அவர்கள் படைகள் வந்து மேட்டிற்கு பின்னான பள்ளத்தாக்கில் பாளையமிறங்கி இருந்தனர். மீதியானியரும், அமெலேக்கியரும் கிழக்கத்தி புத்திரரும் திரளாய் வெட்டுக்கிளிகளைப் போல் படுத்திருந்தனர். ஒட்டகங்களும் கடற்கரை மணலத்தனை திரளாய் இருந்தது. எனவேதான், கர்த்தர் பயந்திருந்த கிதியோனை நோக்கி அவர்களின் படைவீரர்கள் பேசுவதை கேட்கச் சொன்னார்.

உடனே அவர்கள்மேட்டின் மேல் ஏறி சேனையின் முன்னணியிலே ஜாமம் காக்கிறவர்கள் இடமட்டும் போனார்கள்.

அப்பொழுது ஒருவன் ஒரு சொப்பனங் கண்டு மற்றவனிடம் கூறுகிறான். அதாவது ஒரு வாற்கோதுமை அப்பம் உருண்டு வந்து மீதியானியரின் கூடாரத்தை கவிழ்த்து போட்டது என்றான். உடனே கிதியோன் மீதியானியரின் பாளயத்தை எங்கள் கைகளில் ஒப்புக் கொடுத்தார் என்று கூறியபடி 300 பேர் கொண்ட படை வீரர்களை மூன்று பிரிவாக பிரித்து, அவர்கள் ஒவ்வொருவன் கையிலும் ஒரு எக்காளத்தையும் வெறும் பானையும் அந்த பானையில் வைக்க தீ வெட்டிகளையும் கொடுத்து, நடு ஜாமத்தில் பாளயத்தைச் சுற்றிலும் நிற்க செய்து, பின் ஒரே நேரத்தில் எக்காளங்களை ஊதி, பானையை உடைக்கச் சொன்னார். அவர்கள் அவ்விதமே செய்தார்கள்.

பின்பு தீ வெட்டிகளை தங்கள் இடது கையிலும், ஊதும் எக்காளங்களை வலது கையிலும் வைத்துக் கொண்டு “கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம்” என மிகுந்த சத்தத்தோடு கூக்குரலிட்டார்கள். அவர்களின் கையில் வாளோ, பட்டயமோ, வில்லோ ஒன்றும் இல்லை. ஆனால் அவர்கள் வாயில் தேவனைத் துதிக்கும் துதி இருந்ததால் தேவனின் ஆவி அங்கு கிரியை செய்தது. எனவே **கிதியோனின் வீரர்களின் சத்தத்தைக் கேட்டவுடன் எல்லோரும் கூக்குரலிட்டுக் கொண்டு பாளையத்தினுள் அவர்கள் ஒருவருக்கொருவர் விரோதமாக எழும்பி ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்டு ஓடினார்கள்** (நியாயாதிபதிகள் 7:22). இது கர்த்தரால் கிடைத்த வெற்றியாகும்.

நாமும்கூட துன்பங்கள் நடுவில் நம் தேவனைத் துதிக்க வேண்டும். துதி வல்லமையுள்ளது. துன்பங்களை இன்பமாக மாற்றிப்போடும்.

இஸ்ரவேல் மக்களை மீட்க தேவன் கிதியோனை இரட்சகராக்கினார். அதற்கு பின்பு இஸ்ரேல் 40 வருடங்கள் அமைதலாய் இருந்தது.

இப்படியாக தேவன் தம்மை நோக்கி கூப்பிடும் மக்களை ஒருபோதும் கைவிடுவதில்லை. இக்கட்டான நேரங்களில் தேவனை நோக்கி ஜெபிக்கும்போது, தேவன் தம் மக்களை விடுவிக்க இரட்சகரை எந்த ரூபத்திலும் அனுப்பி பாதுகாப்பார்.

இப்படியாக நாமும் கூட சிலசமயங்களில் பலவிதமான துன்பத்தின் பாதையில் கண்ணீரோடு இருக்கும் போது நம் உள்மனதால் வேதத்தை எடுத்து வாசி என உணர்த்தப்படும்போது, வேதாகமத்தில் உள்ள, **நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்;**... ஏசாயா 41:10.

**நீ என் பார்வைக்கு அருமையான படியால் கனம் பெற்றாய்; நானும் உன்னை சிநேகித்தேன்...** ஏசாயா 43:4. போன்ற வசனங்களே நம்மைத் தேற்றும் இரட்சகராக இருக்கிறது.

தொடர்ச்சி 9–ம் பக்கம்.....


## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

### I. வேதாகமத் தபால் கல்வி

**தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.**

**“புதுவாழ்வு – உமக்கு” என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.**

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி

**ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம் ரூ.1000/– மட்டுமே.**

**மேலும் விவரங்களுக்கு :**

**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**

10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.

தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766

**கைபேசி: (+91) 98410 71852, 95661 31858**

**மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in**


## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி” அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |



## ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## அன்றும் இன்றும் என்றும் மாறாத தேவன்!


*கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் – சங்கீதம் 55:22.*

**1969**–ஆம் வருடத்திலே கிறிஸ்தவத்திற்கு எதிரான சூழ்நிலையிலிருந்து தேவனாகிய கர்த்தர் என்னை சந்தித்து, விடுவித்த நாளிலிருந்து, என்னுடைய பழைய சினேகிதர்களுக்கு நான் வேற்று மனிதனானேன். அவர்கள் எனக்குத் தீங்கு செய்ய பல முறைகளைக் கையாண்டனர். ஆனால் தேவன் என்னை கண்மணிபோல் காத்து வந்தார்.

**1971**–ஆம் வருடம் பல உறுதியான வாக்குத்தத்தங்களுடன் தற்போது நான் ஊழியம் செய்யும் சென்னைப் பட்டணத்திற்கு தேவனால் அழைத்து வரப்பட்டேன். இங்கு வந்த முதல்நாள் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். எனக்கு இங்கு யாரையும் தெரியாதக் காரணத்தால் ஒரு சாலையோரத்தில் ஒரு இரவைக் கழிக்க நேர்ந்தது. ஏற்கனவே எதிராளிகளின் துரத்துதலுக்குட்பட்ட நான் மிகவும் பயத்துடன் தூங்காமல் விழித்திருக்கவும் நேர்ந்தது.

அதிகாலை சுமார் 2.00 மணிக்கு இரண்டு காவல்துறை அதிகாரிகள் என்னை சோதனையிட்டனர். நான் என் வாழ்க்கையின் பின்னணியத்தையும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னை சந்தித்த விதத்தையும் அவர்களிடம் விளக்கினேன். என்னிடம் எந்த குற்றத்தையும் அவர்கள் காணவில்லை. எனினும், அந்த இரவில் நான் ஏன் தனியாக அந்த இடத்தில் இருக்கிறேன் என்பதற்கு சரியானக் காரணத்தை அவர்கள் கண்டுகொள்ளாததால், ஒரு அதிகாரி மற்றவரைப் பார்த்து, “இவனைக் காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரிக்கலாம்” என்றார். ஆனால் மற்றவரோ, “முகத்தைப் பார்த்தால் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்த நபர் போல் தோன்றுகிறது” என்றார்.

மேலும், அவர் என்னைப் பார்த்து, “நீ எங்களுடன் வா” என்று கூறி அழைத்துச் சென்றார். அவர் என்னை நேரடியாக காவல்துறைத் தலைமை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று அங்கு வாகனங்களை நிறுத்தும் கார்செட் (Garage) ஒன்றில் பிற அலுவலர்களுடன் தங்க ஏற்பாடு செய்தார். மட்டுமின்றி எனக்குத் தங்குவதற்குத் தேவையான இதர எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து விட்டு, “மனம்திருந்தி நல்ல மனிதர்களாக வாழ முன்வரும் மனிதர்களுக்கு பாதுகாப்பான சரியான இடம் இதுதான். இந்த உதவியை உனக்குச் செய்ய என்னுடைய உள்ளத்தில் ஏதோ ஒரு நபர் சொல்லிக் கொண்டிருக்கிறார். அது யார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், இரவு வேளைகளில் ஒரு பாம்பு மட்டும் இந்த கார் செட்டுக்குள் வந்துப் போகும். அது யாரையும் இதுவரையிலும் கடித்தது இல்லை. அது வரும்போது அசையாமல் படுத்துக் கொள். இங்குள்ள ஏதாவது பூச்சிகளைப் பிடித்து சாப்பிட்டு விட்டுப் போய்விடும். உன்னை ஒரு தெய்வம் வழி நடத்துகிறது என்று சொன்னாயே, அந்த தெய்வம் உன்னைக் காத்துக் கொள்ளட்டும்” என்று சொல்லி விட்டுச் சென்று விட்டார். அவரை நான் அதற்குப் பின்னர் சந்திக்கவே இல்லை.



பொழுதுவிடிந்தது, “இரவில் பாம்பு வரும்” என்று சொன்ன வார்த்தைகள் எனக்கு புலிக்கு பயந்து பாதாளத்தில் விழுந்தது போல் இருந்தது. எனினும் ஒரு டம்ளரில் தண்ணீரை எடுத்து ஜெபித்து, அந்த செட் முழுவதும், “**இயேசுவின் இரத்தம் ஜெயம்**”, “**இயேசுவின் இரத்தம் ஜெயம்**” என்று சொல்லி ஜெபித்துத் தெளித்து விட்டு என் கடமைகளைச் செய்ய ஆரம்பித்தேன். நான் அங்குத் தங்கிய அனுபவத்தில் ஒருநாள் கூட எந்தப் பாம்போ இதரப் பூச்சிகளோ அங்கு வரவேயில்லை. அன்றைய என்னுடைய ஆபத்தான நிலையில் அந்த இடம்தான் முழுமையானப் பாதுகாப்பான இடமாயிருந்தது.

அங்குள்ள ஏராளமான காவல்துறை அதிகாரிகளுடன் எனக்கு நெருங்கியப் பழக்கம் கிடைத்தது. அவர்களுடைய கஷ்டங்களை என்னிடம் மனந்திறந்து சொல்லி, ஜெபித்து விடுதலையும் பெற்றனர். ஏராளம் பேர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். அந்த இடத்தில் தேவ மகிமை வெளிப்பட்டது. எனவே, அவர்கள் என்னை ஒரு இராஜகுமாரன் போல் நடத்தி, போஷித்து, அரவணைத்தனர். சொல்ல முடியாததும், சொல்லி முடியாததுமான அளவுக்கு எனக்கு சந்தோஷமும், உலகப்பிரகாரமான பாதுகாப்பும் கிடைத்தது. பின்னர் ஆண்டவர் வேறு இடத்திற்கு அழைத்துச் சென்று ஒரு வீட்டை வாடகைக்குத் தந்தார். கர்த்தர் நல்லவர். அவர் நல்லவர். **அவரை நம்புகிறவர்களுக்கு ஒரு குறைவுமில்லை. இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்.**

*வனாந்திர யாத்திரையில் களைத்து நான் சோர்ந்து போகும்நேரங்களில்*
*நேசரின் சத்தம் என்னைத் தேற்றிடும், என் வாழ்வு செழித்திடுமே!*

*செங்கடல் எதிர்த்து வந்தும் பங்கம் வந்திடாமல் அங்கு*
*பாதை ஒன்று கண்ணில் தெரியுதே,*
*விடுவிப்பார் ஆண்டவர் நல்குவார் புதுபெலன்*
*தடுத்திடும் சத்துருக்கள் அழிந்து மாளுவார்.*

அந்த தேவன் உங்களையும் ஆசீர்வதிப்பார்.

*******

... 7–ம் பக்கத் தொடர்ச்சி

சில சமயம் நாம் தனியாக பிரயாணம் செய்துக் கொண்டு இருக்கும் போது, திடீரென ஒரு அசௌகரியம் நமக்கு ஏற்பட்டு திகைத்து, கலங்கும்போது நம்மோடு பிரயாணம் செய்யும் ஒருவர் நமக்கு உதவ தேவன் அனுக்கிரகம் பண்ணுவார். அந்த சமயம் அவர்தான் அந்த இரட்சகர். சில சமயங்களில் மருத்துவமனைகளில் வேதனையோடு இருக்கும் நேரத்தில் நாம் அறியாத நம்மை அறிந்திராத ஒரு டாக்டரோ, செவிலியரோ (நர்ஸ்) வந்து அன்பாக பணிவிடை செய்து நம்மை விசாரிக்க, அவர்களை ஒரு இரட்சகராக அனுப்புகிறார். இது நம்மில் அநேகருடைய வாழ்க்கையில் அனுபவித்து இருப்போம்.

இப்படியாக தேவன் நம்மை காக்க நமது வலது பக்கத்தில் நிழலாக இருக்கிறார். அவரை உண்மையாய் நோக்கிப் பார்த்த முகங்கள் பிரகாசமடைந்தன என்று பார்க்கிறோம். எனவே, நாம் தவறுகள் செய்தாலும் உடனே உணர்வடைந்து மனசாட்சிக்குப் பயந்து தேவனிடம் ஒப்புரவாக வேண்டும். மோசேக்கு முன்புவரை மனசாட்சியின் காலமாய் இருந்தது. மோசேக்கு பின் தான், நாம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது, எது பாவம், நாம் எவ்விதம் வாழ வேண்டும், எவ்விதமாக வாழக்கூடாது என்று தேவன் மோசேயின் மூலமாக பிரமாணங்களைக் கட்டளைகளாக நமக்கு தந்தருளினார். பிற்பாடு நியாயப் பிரமாணங்களின் காலமானது. அடுத்து நாம் பார்க்க இருப்பது,

## 4. யோனா!

வேதாகமத்தில் தீர்க்கதரிசியாகிய யோனாவை தேவன் நினிவே பட்டணத்திற்குச் சென்று பாவவழியில் உள்ள மக்களை கண்டித்துணர்த்து எனக் கூறியபோது அவர் கீழ்ப்படியாமல் தர்ஷிசுக்கு போகிற கப்பலில் ஏறி பிரயாணம் செய்கிறார்.

சிறிது நேரத்தில் கடுமையான மழை புயல் காற்று கப்பலை கவித்தும் நிலை. கப்பலில் உள்ள பொருட்களை எல்லாம் கடலில் போட்டு எடையைக்குறைத்தும் கப்பல் மிகவும் மோசமாக ஆடிக் கொண்டு இருந்தது. யோனாவின் கீழ்ப்படியாமையால்தான் கப்பல் அலைக்கழிக்கப்படுகிறதை அறிந்தார்கள். இதற்கு காரணமான யோனாவை கப்பலில் இருந்து தூக்கிப் போட்டவுடன் அவரை விழுங்க தேவன் ஒரு மீனை அனுப்பியிருந்தார். அந்த மீனே அவரைக் காக்கும் இரட்சகர். அது அவரை விழுங்கி விட்டது. 3 நாட்கள் கழித்து யோனாவை அவர் போகவேண்டிய நினிவே பட்டணத்துக் கரையில் கக்கி விட்டது.

யோனா உணர்வடைந்தவராய் எழும்பி நினிவேக்கு சென்று அங்குள்ள மக்களை பாவ வாழ்க்கையில் இருந்து விட்டு விலகி பரிசுத்தமாய் வாழ போதனை செய்கிறார். அவரின் வார்த்தையைக் கேட்டு அரசரும், பிரதானிகளும், மக்கள் அனைவரும் கண்ணீரோடு உபவாசித்து, மனம் திரும்பி ஜெபித்து பாவ வாழ்க்கையில் இருந்து மீண்டு வந்தார்கள். இப்படி யோனாவும் நினிவே மக்களுக்கு இரட்சகராகினார்.

இதுவரை பார்த்த இரட்சகர்கள் தேவனை அறியாத மக்களிடமிருந்தும், கொடுமையான அரசர்களின் பிடியில் இருந்தும், தேவனுக்கு கீழ்ப்படியாமல் துன்பத்தில் சிக்கியவர்களையும் மீட்டு இரட்சித்தார்கள். இரட்சித்தனர். அவர்களின் காலம் முடிந்ததும் அவர்கள் மாண்டு மண்ணுக்குள் மறைந்தனர். ஆனால் இப்படிப்பட்ட பல, பல இரட்சகர்களையும், தீர்க்கதரிசிகளையும் அனுப்பியும் தம் மக்கள் மனம் மாறாததினால் நமக்காக பரலோகம் விட்டு பூலோகம் இறங்கி மனிதரூபம் எடுத்து பாவமில்லாமல் வாழ்ந்து காட்டி நமக்காக சிலுவை சுமந்து முதுகில் வாரினால் அடிப்பட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து அவர் தம் ரத்தத்தை சிந்தி தம் ஜீவனையும் தந்து மீட்டவர் இயேசு கிறிஸ்து. அவரே நம் பாவங்களுக்காக பலியான இரட்சகர். இந்த இயேசு கிறிஸ்து மரித்த மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து இன்றும் நம்முடன் வாழ்ந்து வருகிறார். இன்றும் இவரின் கல்லறை திறந்து கிடக்கிறதே!

இப்படியாக நாம் தவறு செய்தாலும் நம்மைக் காத்து அவர் விரும்பும் பாதையில் வழிநடத்தி, நம்மை பரலோகம் கொண்டு போய் சேர்க்கும் மட்டும் நம்மீது கண் வைத்து காக்கிறவராய் இருக்கிறார் நம் இட்சகர்.

இதனை வாசிக்கும் அன்பு உள்ளங்களுக்கு ஒன்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**தேவனிடத்தில் சேருங்கள். அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்.** ... யாக்கோபு 4:8

அது மட்டுமல்ல, அவரை உண்மையாய் பின்பற்றி அவர் கட்டளைகளைக் கைக் கொண்டு அவருக்காக பரிசுத்தமாய் வாழ்பவர்களுக்கு மேன்மையான பரலோக சிலாக்கியங்கள் உண்டு. ... **மறு ஜென்ம காலத்தில் மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்** மத்தேயு 19:28. என்று ஆண்டவர் இயேசு தமது சீஷர்களுக்கு வாக்கு பண்ணியிருக்கிறாரே. இப்படிப்பட்ட சிலாக்கியம் வேறு யாருக்குக் கிடைக்கும்!

பாவமான உலகத்தில் பாவியாக பிறந்த நம்மையும் பரிசுத்தப்படுத்த விரும்பும் நம் இரட்சகரைப் பின்பற்றி, அவருக்காக நாம் பரிசுத்தமாய் வாழ்ந்து அவரோடு கூட சிம்மாசனத்தில் உட்கார்ந்து நியாயாதிபதிகளாய் வாழ்வோம். அதற்கு நம்மைத் தகுதி படுத்திக் கொள்வோம்.

**உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.**

**நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்**... 1 பேதுரு 1:15,16. கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

*******


# தேவை

## பள்ளி ஆசிரியர்கள்

**செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**
**An *Echo of His Call* Institution**
**விஜயநகரம், மேடவாக்கம், சென்னை – 100.**

சிறந்த கல்வித் தகுதி, அனுபவம், அர்ப்பணிப்பு மற்றும் ஊழிய நோக்குடன் பணிபுரியும் கிறிஸ்தவர்கள் தேவை. தகுதியுள்ள மாணவர்களும் தேவை.

*சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.*

E.mail: sam@echoofhiscall.org
WhatsApp: (+91) 98412 71858

# தேவை

**சென்னை – அழைப்பின் எதிரொலியின்**
**நெகேமியா வேதாகமக் கல்லூரி**
*** இந்தி மொழி ***
**ATA - Registered Candidate for Membership**

**DEAN (Residential):**

அனுபவத்துடன் கூடிய இந்தி இறையியலாளர் (Hindi Theologian) M.Div. / M.Th. தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தகுதியுள்ள இந்தி மாணவர்களும் தேவை. விண்ணப்பியுங்கள்.

E.mail: sam@echoofhiscall.org
WhatsApp: (+91) 98410 71858

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும்போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❊ வருட சந்தா ரூ. 100/–　　❊ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th MARCH 2024**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at Echo of His Call Printers, New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**